அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 327(ii)

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
1986 ஜூலை 29.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

1986-இன் புதிய சம்பளங்கள்-சம்பள அளவுத் திட்டங்களின் உச்சக் கட்டத்தில் தேக்கத்தை உண்டு பண்ணும் வரையறைகளை நீக்குதல் -1986-06-24ஆம் தேதியில் 327(ii) ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் திருத்தம்.

---

1986.06.24ஆம் தேதிய 327(ii)ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 1ஆம் பந்தியை தயவுசெய்து நீக்கிவிடவும்.

02. பின்பு ,1986.06.16ஆம் தேதிய 327(i)ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் கீழ்வரும் 1ஆம் பந்தி திருத்தமின்றி அவ்வாறே இருக்கப்படும்.

" 1. 5ஆம் பந்தியின் உப பந்தி (ii) ஆகச் சேர்க்க.

"இப்பந்தியின் கீழ் வேதனங்களை மாற்றி அமைத்த பின்னர், 1985.12.31இல் பணிக்கமர்த்தப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் யாவருக்கும் 1986.01.01இல் இருந்து 1986இன் புதிய சம்பள அளவுத் திட்டம் மீது ஒரு ஆண்டேற்றம் வழங்கப்படுதல் வேண்டும்."

ஒப்பம்: டி. பி. ஐ. ப். எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.